ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2021 ஒத்தோபர் 19

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2021 ஓகத்து

## பொதுநோக்கு

அதிகரித்த நிதியியல் உட்பாய்ச்சல்கள் 2021 ஓகத்து மாத காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்திய வேளையில், வணிகப்பொருள் ஏற்றுமதிகள் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக ஐ.அ.டொலர் 1.0 பில்லியனை விஞ்சிக் காணப்பட்டன. இருப்பினும், இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பானது ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பினை விஞ்சிக் காணப்பட்டு ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவாக்கமொன்றினைத் தோற்றுவித்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 ஓகத்தில் சில உத்வேகத்தினைத் திரட்டி, இலக்கங்கள் குறைவாகக் காணப்பட்டாலும் கடந்த மாதத்தினைப் விட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. 2021 ஓகத்தில் தொழிலாளர் பணவனுப்பல்களின் மிதமான போக்கொன்று அவதானிக்கப்பட்டிருந்தது. பொதுவான சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீட்டின் பகுதியாக 2021இல் இலங்கை பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொண்டது. மேலும், இலங்கை மத்திய வங்கிக்கும் வங்காளதேச வங்கிக்குமிடையிலான இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளின் கீழான ஆரம்ப பகிர்ந்தளிப்புக்கள் 2021 ஓகத்து மாத காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டன. வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி உடனடிச் செலாவணி வீதம் 2021 ஓகத்தில் பரந்தளவில் உறுதியாகக் காணப்பட்ட வேளையில், மாதத்தின் இறுதிப்பகுதியினை நோக்கிய செலாவணி வீதத்தின் மீதான அழுத்தங்கள் அவதானிக்கப்பட்டு, ரூபாவின் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிடுவதனைத் தூண்டியது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)

| வகை | ஓகத்து 2020 ஐ.அ.டொ.மில் | ஓகத்து 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன-ஓகத் 2020 ஐ.அ.டொ.மில் | சன-ஓகத் 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 947 | 1,100 | 16.2 | 6,445 | 7,903 | 22.6 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,289 | 1,687 | 30.8 | 10,257 | 13,411 | 30.7 |
| வர்த்தக மீதி | -342 | -586 | | -3,812 | -5,509 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | - | 7 (இ) | - | 682 (ஆ) | 33 (இ) | -95.2 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 664 | 447 | -32.8 | 4,346 | 4,224 | -2.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -44 | -16 | | -173 | -181 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 118 | - (உ) | | 1,433 | 1,233 (ஊ) | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் (மொத்தம்) | 1 | - | | 91 | 16 | |
| நீண்ட காலக் கடன்கள் (மொத்தம்) | 117 | வி.கி. | | 1,341 | 1,218 (ஊ) | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (மொத்தம்) (எ) | | | | 351 | 398 | |
| திரண்ட நிலுவை | | | | -722 | -2,423 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2020 இற்கான சாராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றுக்கு சராசரி செலவிடும் மதிப்பீடுகளின் அடிப்படையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது.
(இ) இத்தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2021 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்குகின்றது
(உ) அரசாங்கத்திற்கான மொத்த உட்பாய்ச்சல்களின் தரவுகள் 2021 ஓகத்தின் வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கவில்லை
(ஊ) நீண்ட காலக் கடன்களுக்கான ஒன்றுசேர்ந்த தரவுகள் வெளிநாட்டுக் கடன்களை 2021 யூலை வரை மாத்திரம் உள்ளடக்கியுள்ளன.
(எ) முதலீட்டுச் சபை மூலம் பதிவுசெய்யப்பட்டவாறு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடங்கலாக ஒவ்வொரு ஆண்டினதும் முதல் ஆறு மாதங்களுக்கான தரவுகள்.


இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் பார்வையிடமுடியும்.
https://www.cbsl.gov.lk/ta/node/6181

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மீதி:** வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2020 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 342 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், 2021 ஓகத்தில் ஐ.அ.டொலர் 586 மில்லியனிற்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் விரிவடைந்தது. வர்த்தகக் கணக்கின் ஒன்றுசேர்ந்த பற்றாக்குறையும் 2021 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,812 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 5,509 மில்லியனிற்கு விரிவடைந்தது. வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவாக்கத்திற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.


**வர்த்தக மாற்று விகிதம்:** இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதம் 2020 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்தில் 19.2 சதவீதத்தினால் தேய்வடைந்தமைக்கு இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பினை விட விஞ்சிக் காணப்பட்டமையே காரணமாகும்.

**வரைபடம்: 1 : 2021 சனவரி – ஓகத்து காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பிற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**





**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2020 – 2021)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2020-2021)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஓகத்திலும் பார்க்க 2021 ஓகத்தில் ஐ.அ.டொலர் 1,100 மில்லியனை அடையும் விதத்தில் 16.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ஓகத்து மாதமொன்றில் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதிகளின் உயர்ந்த மட்டத்தினை அண்மித்தன.** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 யூலையில் சிறிதளவு உயர்வடைந்து ஐ.அ.டொலர் 1,104 மில்லியன் பெறுமதியாகக் காணப்பட்டன. ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6,445 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 7,903 மில்லியனாக விளங்கி 22.6 சதவீதத்தினால் அதிகரித்தன. இருப்பினும், வணிகப்பொருள் வெளிப்பாய்ச்சல் மற்றும் நிதியியல் உட்பாய்ச்சலுடன் தொடர்புடைய அத்தகைய ஏற்றுமதிகளுக்கிடையில் மாதாந்த சராசரியாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 345 மில்லியன் பெறுமதியான அண்மைய இடைவெளியானது கருத்திற்கொள்ள வேண்டிய விடயமாகக் காணப்படுகின்றது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** கைத்தொழில் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்தில் 17.5 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ் அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு ஆடைகள் மற்றும் புடவைகள், பெற்றோலிய உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை மற்றும் பொறிகள் மற்றும் எந்திரவியல் சாதனங்கள் போன்ற பெரும்பாலான கைத்தொழில் உற்பத்திகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட பரந்த அடிப்படையிலான அதிகரிப்பே காரணமாகும். அனைத்து முக்கிய சந்தைகளுக்குமான ஆடை ஏற்றுமதிகள் அதிகரித்தன. பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் வானூர்தி மற்றும் நீக்கல எரிபொருட்களின் விலைகளின் அதிகரிப்புடனும் நீக்கல எரிபொருள் ஏற்றுமதிகளின் அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புடனும் அதிகரித்தன. இறப்பர் டயர்கள் மற்றும் கையுறைகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பானது இறப்பர் உற்பத்திகளிலிருந்தான அதிகரித்த வருவாய்களுக்கு காரணமாகியது.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** வேளாண்மைப் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 2020 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்தில் 10.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தேயிலை, தெங்கு (உள்ளீடு மற்றும் உள்ளீடற்ற உற்பத்திகள் இரண்டும்), சிறு வேளாண்மை உற்பத்திகள் (முக்கியமாக எள் விதைகள் மற்றும் பாக்குகள்), கடலுணவு மற்றும் இறப்பர் ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். தேயிலை ஏற்றுமதிகளினால் ஈட்டப்பட்ட அலகு விலை ஓராண்டிற்கு முன்னைய நிலையிலும் பார்க்க 2021 ஓகத்தில் தாழ்வாகக் காணப்பட்டாலும், ஏற்றுமதி அளவுகள் அதிகரித்து தேயிலையிலிருந்தான உயர்ந்த வருவாய்களைத் தோற்றுவித்தன. கறுவா ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தவிர்ந்து மிளகு, கராம்பு, சாதிக்காய் மற்றும் சாதிபத்திரி உள்ளடங்கலான ஏனைய வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.


**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஓகத்திலும் பார்க்க 2021 ஓகத்தில் அதிகரித்தமைக்கு மண் மற்றும் கற்கள் மற்றும் தாது, சாம்பல் கட்டிகள் மற்றும் சாம்பல் என்பனவற்றிலிருந்தான உயர்ந்த வருவாய்களே காரணமாகும்.

**ஏற்றுமதிச் சுட்டெண்கள்:** ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணும் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 ஓகத்தில் முறையே 13.9 சதவீதத்தினாலும் 2.0

[1] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இற்கிணங்க வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதிகள் இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளன.


சதவீதத்தினாலும் அதிகரித்தன. இது 2021 ஓகத்தில் ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பிற்கு அளவுத் தாக்கமே முக்கிய காரணமாக அமைந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | ஓகத்து 2020 (ஐ.அ.டொ. மில்) | ஓகத்து 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **729.0** | **856.8** | **17.5** | **4,905.4** | **6,093.2** | **24.2** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 40.8 | 57.5 | 41.0 | 302.9 | 354.0 | 16.9 |
| விலங்குத்தீன் | 7.7 | 5.5 | -28.9 | 75.6 | 77.5 | 2.5 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 440.0 | 493.3 | 12.1 | 2,853.1 | 3,434.8 | 20.4 |
| இதில் ஆடைகள் | 389.6 | 439.6 | 12.8 | 2,528.1 | 3,122.6 | 23.5 |
| புடவைகள் | 22.5 | 43.3 | 92.2 | 154.9 | 227.5 | 46.8 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 28.0 | 10.4 | -62.7 | 170.1 | 84.8 | -50.2 |
| இறப்பர் உற்பத்திகள் | 71.0 | 88.6 | 24.8 | 488.9 | 681.7 | 39.4 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 12.2 | 21.7 | 77.8 | 102.6 | 178.0 | 73.4 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 31.1 | 41.1 | 32.4 | 209.5 | 329.1 | 57.1 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.1 | 9.5 | 32.7 | 46.2 | 74.8 | 61.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 22.0 | 46.3 | 110.7 | 268.1 | 294.9 | 10.0 |
| இரசாயன உற்பத்திகள் | 15.7 | 16.7 | 6.1 | 107.7 | 143.7 | 33.4 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 9.3 | 10.6 | 14.0 | 64.7 | 82.6 | 27.7 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 4.5 | 6.1 | 36.0 | 25.9 | 35.5 | 37.0 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 5.7 | 5.8 | 3.1 | 38.2 | 33.8 | -11.4 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 23.7 | 6.0 | -74.8 | 72.6 | 50.7 | -30.2 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 10.4 | 15.5 | 49.1 | 76.0 | 100.1 | 31.8 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 1.8 | 3.1 | 71.5 | 13.3 | 24.7 | 85.9 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 25.9 | 29.5 | 13.9 | 160.2 | 197.4 | 23.3 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **215.9** | **239.4** | **10.9** | **1,516.0** | **1,765.5** | **16.5** |
| தேயிலை | 103.0 | 116.8 | 13.4 | 805.6 | 882.4 | 9.5 |
| இறப்பர் | 1.5 | 3.7 | 149.1 | 17.9 | 27.3 | 52.7 |
| தேங்காய் | 33.9 | 40.1 | 18.1 | 221.5 | 276.9 | 25.0 |
| வாசனைத்திரவியங்கள் | 39.7 | 39.7 | -0.1 | 194.5 | 282.4 | 45.2 |
| காய்கறிகள் | 5.2 | 2.2 | -56.9 | 26.1 | 18.4 | -29.7 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 4.9 | 2.6 | -46.3 | 16.9 | 21.4 | 26.6 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 12.1 | 15.7 | 29.9 | 100.3 | 91.1 | -9.1 |
| கடலுணவு | 15.6 | 18.6 | 19.6 | 133.2 | 165.5 | 24.3 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **1.6** | **3.1** | **93.3** | **14.3** | **30.7** | **115.3** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **0.8** | **1.0** | **36.1** | **9.3** | **13.6** | **45.5** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **947.2** | **1,100.4** | **16.2** | **6,445.0** | **7,903.0** | **22.6** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகளின் மீதான செலவினம் 2020 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,289 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்தில் ஐ.அ.டொலர் 1,687 மில்லியனிற்கு 30.8 சதவீதத்தினால் அதிகரித்தது.** அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சில இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தொடர்ச்சிக்கு மத்தியிலும் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இறக்குமதிகளின் சகல முக்கிய வகைகளிலும் அதாவது நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் என்பனவற்றில் அவதானிக்கப்பட்டது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 10,257 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் மொத்த இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 13,411 மில்லியனாக விளங்கியது.

**நுகர்வுப் பொருட்கள்:** காய்கறிகள் (முக்கிய பருப்பு மற்றும் வெங்காயம்), பாற்பண்ணை உற்பத்திகள் (பால் மா), கடலுணவு (முக்கியமாக உலர்ந்த நெத்தலி மற்றும் உறைந்த மீன்), வாசனைத்திரவியங்கள் (மிளகாய்) மற்றும் பல்வகை உணவு மற்றும் குடிபானங்கள் ஆகியவற்றிலிருந்து முதன்மையாகத் தோன்றிய அதிகரிப்புடன் உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதி மீதான செலவினம் 2021 ஓகத்தில் (ஆண்டிற்கு ஆண்டு) 12.3 சதவீதத்தினால் அதிகரித்தது. சீனி இறக்குமதிகளின் செலவினத்தில் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அதேவேளை, அதிகரித்த தடுப்பூசிகளின் இறக்குமதி மீதான செலவினத்தினால் முக்கியமாகத் தூண்டப்பட்டு உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 67.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது. மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட உந்து ஊர்திகள் போன்ற பொருட்கள் தவிர்ந்த உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 43.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது. வீட்டு உபயோகச் சாதனங்கள், தொலைத்தொடர்பூட்டல் கருவிகள், புடவைகள் மற்றும் துணைப்பொருட்கள், இறப்பர் உற்பத்திகள், வீட்டு மற்றும் தளபாடப் பொருட்கள் போன்றன உள்ளடங்கலாக உணவல்லா நுகர்வுப் பொருட்களின் அனேகமான பரந்த வகைகளும் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

**இடைநிலைப் பொருட்கள்:** இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020 ஓகத்திலும் பார்க்க 2021 ஓகத்தில் 27.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு எரிபொருள் மற்றும் புடவைகளினதும் புடவைப் பொருட்களினதும் மீதான இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பே முக்கிய காரணமாகும். சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் மசகெண்ணெய் விலைகளின் அதிகரிப்புடன் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 42.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்த வேளையில், அவற்றின் இறக்குமதி அளவுகள் வீழ்ச்சியடைந்தன. மசகெண்ணெய் பீப்பாய் ஒன்றிற்கான இறக்குமதிச் செலவினம் 2020 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 47.74 உடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்தில் ஐ.அ.டொலர் 74.88 ஆக விளங்கியது. வளமாக்கி இறக்குமதிகளின் செலவினத்தில் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமையானது வளமாக்கிகளின் மீதான அரசாங்கக் கொள்கையின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது.


**முதலீட்டுப் பொருட்கள்:** முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020இன் அதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்தில் 30.8 சதவீதத்தினால் அதிகரித்தது. பொறி மற்றும் கருவிகளின் கீழ், ஏனையவற்றுடன் ஒப்பிடுகையில் கணினிகள் போன்ற அலுவலக இயந்திரங்கள், மருத்துவ மற்றும் ஆய்வுகூட சாதனங்கள், வேளாண்மைப் பொறிகள், மின் மோட்டார் மற்றும் இயக்கத் தொகுதிகள் மற்றும் பல்வகைக் கைத்தொழில் பொறிகள் போன்றவை இறக்குமதிச் செலவினத்தில்

[2] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இற்கிணங்க வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் இணைப்பு II இல் காட்டப்பட்டுள்ளன.

குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. கட்டடவாக்கப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினமானது இரும்பு மற்றும் உருக்கு, இரும்பு மற்றும் உருக்குப் பொருட்கள் மற்றும் கனிம உற்பத்திகள் (முதன்மையாக கல்நார் தகடுகள்) போன்றவற்றின் இறக்குமதிகள் காரணமாக அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. சீமெந்து இறக்குமதிகளின் மீதான இறக்குமதிச் செலவினத்தின் வீழ்ச்சிக்கு அளவின் தாக்கம் காரணமாயமைந்த வேளையில், அது போக்குவரத்து சாதனங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்தியமைக்குச் சிறிய விமானங்களதும் வேளாண்மை உழுபொறிகளினதும் இறக்குமதிகளே முக்கிய காரணமாகும்.


**இறக்குமதிச் சுட்டெண்கள்**: 2021 ஓகத்தில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 3.6 சதவீதத்தினாலும் 26.3 சதவீதத்தினாலும் அதிகரித்து இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பிற்கு விலைத் தாக்கமே முக்கிய காரணம் என்பதைக் குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | ஓகத்து 2020 (ஐ.அ.டொ. மில்) | ஓகத்து 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **228.6** | **324.3** | **41.8** | **2,300.3** | **2,579.3** | **12.1** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 106.1 | 119.1 | 12.3 | 1,023.7 | 1,151.9 | 12.5 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 3.0 | 2.3 | -21.7 | 21.0 | 24.4 | 16.1 |
| பால் உற்பத்திகள் | 23.0 | 30.6 | 32.9 | 228.9 | 231.2 | 1.0 |
| காய்கறிகள் | 18.4 | 36.1 | 96.9 | 246.3 | 278.7 | 13.1 |
| கடலுணவு | 12.7 | 14.8 | 17.2 | 139.5 | 82.5 | -40.8 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 18.5 | 3.2 | -82.8 | 162.6 | 211.3 | 30.0 |
| வாசனைத்திரவியங்கள் | 8.0 | 9.8 | 22.4 | 84.2 | 90.5 | 7.6 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 22.65 | 22.3 | -1.6 | 141.2 | 233.3 | 65.2 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 122.5 | 205.1 | 67.5 | 1,276.7 | 1,427.3 | 11.8 |
| தனியாள் ஊர்திகள் | 1.3 | 1.1 | -13.6 | 280.8 | 7.8 | -97.2 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 47.6 | 98.5 | 106.8 | 385.3 | 532.0 | 38.1 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 8.6 | 16.5 | 91.6 | 100.4 | 179.8 | 79.1 |
| புடவை மற்றும் ஆடைப்பொருட்கள் | 13.2 | 18.5 | 39.8 | 137.6 | 138.7 | 0.8 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 27.6 | 32.8 | 18.7 | 174.6 | 283.1 | 62.2 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 10.4 | 13.4 | 28.6 | 91.6 | 103.6 | 13.1 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 13.7 | 24.3 | 77.7 | 106.4 | 182.4 | 71.4 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **791.3** | **1,010.0** | **27.6** | **5,692.4** | **7,942.4** | **39.5** |
| எரிபொருள் | 247.5 | 352.7 | 42.5 | 1,691.2 | 2,395.9 | 41.7 |
| இதில் மசகெண்ணெய் | 69.3 | 107.7 | 55.4 | 387.6 | 516.4 | 33.2 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 178.2 | 245.0 | 37.5 | 1,174.4 | 1,748.3 | 48.9 |
| நிலக்கரி | 0.0 | 0.0 | -49.1 | 129.2 | 131.2 | 1.6 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 7.9 | 6.8 | -14.6 | 57.4 | 81.7 | 42.3 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 194.4 | 241.3 | 24.1 | 1,457.2 | 1,943.7 | 33.4 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 30.5 | 37.5 | 22.7 | 239.5 | 319.4 | 33.4 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 14.6 | 25.0 | 71.0 | 132.5 | 187.3 | 41.3 |
| கோதுமை மற்றும் சோளம் | 46.0 | 55.0 | 19.4 | 229.3 | 265.9 | 15.9 |
| அடிப்படை உலோகங்கள் | 39.0 | 39.6 | 1.5 | 246.6 | 499.2 | 102.4 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 48.9 | 54.5 | 11.5 | 323.9 | 518.6 | 60.1 |
| இரசாயன உற்பத்திகள் | 65.3 | 80.1 | 22.6 | 518.3 | 732.6 | 41.3 |
| வளமாக்கி | 8.2 | 0.9 | -88.7 | 124.3 | 104.0 | -16.4 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 17.0 | 35.4 | 108.3 | 145.8 | 265.8 | 82.3 |
| கனிம உற்பத்திகள் | 14.3 | 17.7 | 23.6 | 107.6 | 106.1 | -1.4 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 57.5 | 63.6 | 10.6 | 418.7 | 522.4 | 24.8 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **269.0** | **351.7** | **30.8** | **2,253.2** | **2,882.3** | **27.9** |
| பொறி மற்றும் கருவிகள் | 177.6 | 224.0 | 26.1 | 1,324.6 | 1,822.5 | 37.6 |
| கட்டடப் பொருட்கள் | 82.0 | 97.5 | 18.9 | 671.4 | 803.9 | 19.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 9.1 | 29.6 | 224.5 | 255.3 | 252.1 | -1.2 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.2 | 0.5 | 142.0 | 2.0 | 3.7 | 90.6 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.2** | **0.8** | **312.3** | **11.4** | **7.6** | **-33.8** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,289.1** | **1,686.7** | **30.8** | **10,257.4** | **13,411.5** | **30.7** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,041.6** | **1,334.0** | **28.1** | **8,566.1** | **11,015.6** | **28.6** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது


**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்தில் மிதமடைந்து காணப்பட்டன.** தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020 ஓகத்தில் பதிவுசெய்த ஐ.அ.டொலர் 664 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்து மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 447 மில்லியனாக விளங்கின. 2021 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 4,224 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.8 சதவீத சிறிதளவானதொரு வீழ்ச்சியினைக் காண்பித்தது.


**சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் முன்னைய மாதத்திலும் பார்க்க 2021 ஓகத்தில் சிறிதளவு அதிகரிப்பினைக் காண்பித்தன.** இதற்கமைய, 2021 ஓகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 யூலையில் பதிவுசெய்யப்பட்ட 2,429 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 5,040 ஆக பதிவுசெய்யப்பட்டன. மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2020இன் தொடர்பான காலத்திற்கான 507,311 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்து வரையான முதல் எட்டு மாத காலப்பகுதியில் 24,337 வருகைகளைப் பதிவுசெய்தன. 2021 ஓகத்து காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக கனடா, ஜேர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2021 ஓகத்தில் ஐ.அ.டொலர் 7 மில்லியனாகக் காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2020இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 682 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்து வரையான எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 33 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன.

· **வரைபடம் 9: மாதாந்த சுற்றுலாப்பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**வரைபடம் 10: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,
உரிமம்பெற்ற வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி


## சொத்துப்பட்டியல் பாய்ச்சல்கள்

**2021 ஓகத்தில் அரச பிணையங்கள் சந்தையில் சிறிதளவான தேறிய வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் பதிவு செய்யப்பட்டன.** 2021 ஓகத்து வரையான எட்டு மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 26 மில்லியனாக விளங்கிய வேளையில், வெளிநின்ற வெளிப்படுத்துகை 2021 ஓகத்து இறுதியளவில் ஐ.அ.டொலர் 10 மில்லியனாகத் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டது. அதேவேளை, 2021 ஓகத்தில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 16 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்து 2021 ஓகத்து வரையான எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 181 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைத் தோற்றுவித்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 2.8 பில்லியனிலிருந்து 2021 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனிற்கு அதிகரித்தன.** இவ்வதிகரிப்பிற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடு மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கும் வங்காளதேச வங்கிக்குமிடையிலான இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாட்டின் கீழான ஆரம்ப பகிர்ந்தளிப்புக்களின் பெறுகைகளும் காரணமாயமைந்தன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இம்மட்டமானது சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான சீன யுவான் 10 பில்லியன் பெறுமதியான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) மூன்று வருட இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையினை உள்ளடக்கவில்லை. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 7.3 பில்லியனாக விளங்கி 4.6 மாதங்களின் இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்படுகின்றது.

**வரைபடம் 11: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட உடனடி பரிவர்த்தனை வீதம் 2021 ஓகத்து மாத இறுதியில் செலாவணி வீதத்தின் மீதான சில அதிகரித்த அழுத்தங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டது.** ஓகத்து மாத காலப்பகுதியில் இலங்கையின் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 4.8 சதவீத தேய்வினைப் பதிவுசெய்தது. இது ஓகத்து மாத பின்னைய பகுதியில் இறக்குமதிச் செலவினத்துடன் தொடர்புடைய உயர்ந்த வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளிற்கு முக்கியமாக காரணமாயமைந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான திரவத்தன்மையினை வழங்குவதற்கு மத்திய வங்கியின் தலையீட்டினை அவசியப்படுத்தியது. 2021 ஒத்தோபர் 18 வரையான காலப்பகுதியில் ரூபா ஐ.அ. டொலருக்கெதிராக 6.8 சதவீத தேய்வினைப் பதிவுசெய்தது. 2021 ஒத்தோபர் 18 வரையான காலப்பகுதியில் குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பனவற்றிற்கு எதிராக தேய்வடைந்த வேளையில் யப்பானிய யென்னிற்கு எதிராக உயர்வடைந்தது. அதேவேளை, இலங்கையின் ரூபா உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களினால் பிரதிபலிக்கப்பட்டவாறு தொடர்ந்தும் பெருமளவில் குறைத்து மதிப்பிடப்பட்டதாகவே காணப்படுகின்றது.

**வரைபடம் 12: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2019 | 2020 | 2021 (ஒத்தோபர் 18 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | +0.6% | -2.6% | -6.8% |
| யூரோ | +2.6% | -11.2% | -1.1% |
| பவுண் ஸ்ரேலிங் | -2.8% | -6.2% | -7.5% |
| யப்பானிய யென் | -1.0% | -7.5% | +3.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | +1.3% | -11.4% | -3.2% |
| இந்தியன் ரூபா | +2.6% | 0.0% | -4.5% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு I:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)

| வகை | ஓகத் 2020 ஐ.அ.டொ. மில் | ஓகத் 2021 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-ஓகத் 2020 ஐ.அ.டொ. மில் | சன-ஓகத் 2021 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **214.2** | **241.4** | **12.69** | **1,582.3** | **1,795.6** | **13.5** |
| 03. மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 17.3 | 20.6 | 19.25 | 149.7 | 191.7 | 28.1 |
| 04. தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 4.4 | 5.2 | 16.59 | 41.7 | 44.2 | 6.0 |
| 05. காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 40.6 | 46.7 | 14.90 | 267.6 | 299.1 | 11.8 |
| 07. கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 138.7 | 152.6 | 9.98 | 978.8 | 1,138.7 | 16.3 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **14.8** | **14.6** | **-1.15** | **74.0** | **89.9** | **21.5** |
| 11 குடிபானங்கள் | 2.4 | 3.4 | 44.37 | 20.4 | 20.4 | -0.3 |
| 12. புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 12.4 | 11.2 | -9.77 | 53.6 | 69.6 | 29.8 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **32.6** | **37.6** | **15.35** | **230.1** | **284.5** | **23.6** |
| 23 மசகு இறப்பர் | 1.6 | 3.8 | 143.52 | 18.4 | 28.0 | 51.5 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 23.9 | 21.3 | -10.90 | 145.7 | 160.4 | 10.1 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **22.0** | **46.3** | **110.66** | **268.1** | **294.9** | **10.0** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 22.0 | 40.0 | 82.02 | 255.5 | 258.0 | 1.0 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 0.0 | 6.3 | … | 12.6 | 36.9 | 191.9 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **10.6** | **13.7** | **29.83** | **56.1** | **83.0** | **48.1** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி, கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 9.1 | 7.7 | -15.19 | 46.7 | 54.7 | 17.1 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள், வே.எ.கு** | **21.4** | **23.9** | **11.67** | **140.4** | **187.8** | **33.8** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **122.0** | **156.7** | **28.43** | **868.8** | **1,095.4** | **26.1** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள், வே.எ.கு | 47.9 | 56.9 | 18.95 | 340.6 | 439.3 | 29.0 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை, வே.எ.கு | 42.8 | 52.0 | 21.50 | 293.6 | 297.6 | 1.4 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள், வே.எ.கு | 15.7 | 27.2 | 73.72 | 123.9 | 216.5 | 74.7 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **36.2** | **48.6** | **34.36** | **246.5** | **392.8** | **59.4** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள், வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 23.4 | 27.0 | 15.10 | 151.6 | 212.7 | 40.3 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **473.5** | **517.6** | **9.31** | **2,978.8** | **3,678.7** | **23.5** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 434.3 | 475.3 | 9.44 | 2,736.9 | 3,388.9 | 23.8 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.0** | **0.0** | **…** | **0.0** | **0.3** | **5,829.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **947.2** | **1,100.4** | **16.17** | **6,445.0** | **7,903.0** | **22.6** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு – வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4 இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு II:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)**

| வகை | ஓகத் 2020 ஐ.அ.டொ. மில் | ஓகத் 2021 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-ஓகத் 2020 ஐ.அ.டொ. மில் | சன-ஓகத் 2021 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **160.93** | **194.2** | **20.7** | **1,385.5** | **1,534.0** | **10.7** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 23.0 | 30.7 | 33.1 | 229.2 | 231.5 | 1.0 |
| 03. மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 12.7 | 14.9 | 17.2 | 140.1 | 83.2 | -40.6 |
| 04. தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 48.8 | 57.5 | 17.9 | 249.2 | 288.6 | 15.8 |
| 05. காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 22.4 | 40.5 | 80.5 | 289.5 | 324.0 | 11.9 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 18.5 | 3.2 | -82.8 | 162.6 | 211.3 | 30.0 |
| 07. கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 10.6 | 12.2 | 15.5 | 107.4 | 117.1 | 9.0 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **9.13** | **9.8** | **7.3** | **67.4** | **51.0** | **-24.3** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **28.43** | **47.1** | **65.8** | **301.0** | **380.5** | **26.4** |
| 23 மசகு இறப்பர் | 13.88 | 31.0 | 123.0 | 122.3 | 233.8 | 91.2 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 3.02 | 1.1 | -62.5 | 62.6 | 14.5 | -76.8 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **247.51** | **352.7** | **42.5** | **1,691.2** | **2,395.9** | **41.7** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 224.21 | 306.1 | 36.5 | 1,402.7 | 2,030.6 | 44.8 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 23.27 | 46.5 | 99.9 | 159.3 | 234.1 | 46.9 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **21.93** | **17.6** | **-19.8** | **111.2** | **211.3** | **90.1** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி, கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 21.66 | 15.7 | -27.7 | 106.2 | 194.1 | 82.8 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள், வே.எ.கு** | **168.37** | **229.7** | **36.4** | **1,330.4** | **1,860.4** | **39.8** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 43.1 | 93.2 | 116.3 | 357.7 | 491.2 | 37.3 |
| 56 வளமாக்கி, மற்றும் தயாரிக்கப்பட்டவை | 8.2 | 0.9 | -89.2 | 124.2 | 103.5 | -16.7 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 33.5 | 38.9 | 16.2 | 214.1 | 382.0 | 78.4 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 13.5 | 12.8 | -5.2 | 90.8 | 112.0 | 23.3 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **369.89** | **448.2** | **21.2** | **2,750.0** | **3,787.3** | **37.7** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 30.1 | 35.9 | 19.4 | 232.3 | 305.5 | 31.5 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட் பொருட்கள் போன்றவை, வே.எ.கு | 190.8 | 238.6 | 25.0 | 1,393.1 | 1,907.5 | 36.9 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள், வே.எ.கு | 43.5 | 43.1 | -1.1 | 338.4 | 337.0 | -0.4 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 47.9 | 55.3 | 15.4 | 335.7 | 612.5 | 82.5 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **225.05** | **304.0** | **35.1** | **2,105.0** | **2,563.1** | **21.8** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 30.66 | 51.6 | 68.2 | 258.2 | 435.5 | 68.7 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் மற்றும் பொறி உதிரிப்பாகங்கள், வே.எ.கு | 39.3 | 49.6 | 26.3 | 314.9 | 413.8 | 31.4 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 16.9 | 32.8 | 93.5 | 123.5 | 218.7 | 77.1 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 48.6 | 55.4 | 14.1 | 310.6 | 543.6 | 75.0 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 47.6 | 62.6 | 31.5 | 343.0 | 485.5 | 41.5 |
| 78 வீதி ஊர்திகள் | 14.6 | 23.9 | 64.1 | 473.3 | 239.0 | -49.5 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **57.53** | **82.6** | **43.5** | **505.7** | **619.3** | **22.5** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 10.73 | 15.9 | 47.9 | 116.0 | 117.2 | 1.0 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 14.79 | 21.2 | 43.1 | 120.5 | 157.3 | 30.5 |
| **9. இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத பண்டங்கள் மற்றும் கொடுக்கல்வாங்கல்** | **0.32** | **0.8** | **139.3** | **10.2** | **8.7** | **-14.1** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,289.09** | **1,686.7** | **30.8** | **10,257.4** | **13,411.4** | **30.7** |

(அ) தற்காலிகமானது

வே.எ.கு – வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4 இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf